**இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகத்தின் 2012**

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகத்தின் 2012 திசெம்பர் 31 இல் இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

2010 ஆம் ஆண்டிலிருந்து காணப்பட்ட ரூபா 267,670 தொகையான ஆதனக் கடன் மற்றும் ரூபா 584,427 தொகையான ஆதனக் கடன் 2012 திசெம்பர் 31 வரை அறவிடப்படாது காணப்பட்டன.

#### 1.2.2 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

பின்வரும் கணக்கு விடயங்களுக்கு முன்பாகக் காட்டப்பட்டுள்ள பதிவேடுகள் மற்றும் கோவைகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| விடயம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்று |
|---|---|---|
| | ரூபா | |
| நூல் நிலையப் புத்தகங்கள் | 153,593 | மெய்மையாய்வுச் சபை அறிக்கை |
| முற்பணங்கள் | 2,468,900 | செயற்திட்ட முற்பணங்கள் பதிவேடு |

### 1.2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடனான இணங்காமைகள்

பின்வரும் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|---|
| (அ) | 2011 ஏப்ரல் 18 ஆம் திகதிய PAYE/Tax/01/2011 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் சுற்றுநிருபம் | உழைக்கும் போதே செலுத்தும் வரி கணிப்பீடு செய்கையில் ஊக்குவிப்புப் படிகள் மற்றும் ஏனைய படிகளையும் கவனத்தில் கொள்ள வேண்டிய போதிலும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்படடிருக்கவில்லை. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை (நி.பி) | |
| | (i) நி.பி 135 | ஏற்பாடுகளின் பிரகாரம் நிதிசார் மற்றும் அதிகார ஒப்படைப்பு இடம்பெற்றிருக்கவில்லை. |
| | (ii) நி.பி 757 | ஒவ்வொரு பிரிவிலும் இருப்பு பதிவேடு பேணப்பட்டிருக்காததுடன் பொருள் மெய்மையாய்வுச் சபை அறிக்கைகளினதும் மீதிகள் கணக்கிணக்கம் செய்யப்பட்டு பொருட்களின் சரியான தன்மை உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| | (iii) நி.பி 1645 (ஆ) மற்றும் (இ), நி.பி 1646 | நாளாந்த ஓட்ட அட்டவணைகள் மற்றும் மாதாந்த பொழிப்பக்களைப் பேணுவதற்கும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பிவைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| | (iv) நி.பி 1645 (அ) மற்றும் நி.பி 1647 (அ) | முறைப்படி பூர்த்தி செய்யப்பட்ட வாகன சம்பவக் குறிப்பு புத்தகங்கள் பேணப்பட்டிருக்கவில்லை. |
| | (v) நி.பி 1647 (உ) மற்றும் நி.பி 802 | இதற்கிணங்க வாகனப்பதிவேடு பேணப்பட் டிருக்கவில்லை. |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை | |
| | தாபனவிதிக் கோவையின் II ஆம் | நிறுவனத்தின் நிதி ஆலோசகர் பதவிக்காக 2007 |

| | |
|---|---|
| அத்தியாயத்தின் 13.3 ஆம் பந்தி | சனவரியிலிருந்து 2013 திசெம்பர் வரை நிரந்தர உத்தியோகத்தர் ஒருவர் சேர்த்துக் கொள்ளப்படாது பதிற்கடமை உத்தியோகத்தர் ஒருவர் சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்தார். |

(ஈ) சுற்றுநிருபம்

| | | |
|---|---|---|
| (i) | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றுநிரூபம் | கடந்த 05 ஆண்டுகளில் ரூபா 4,175,056 பெறுமதியான கணனி துணைக்கருவிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தும் சுற்றுநிருபத்தின் பிரகாரம் ஏடுகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | 2008 திசெம்பர் 31 ஆந் திகதிய 30/2008 ஆம் இலக்க பொதுநிர்வாகச் சுற்றுநிருபம் மற்றும் 2013 சனவரி 31 ஆந் திகதிய 157(1) ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றுநிருபம். | இடர்கடன் வழங்கும் போது உச்ச கடன் எல்லை 10 மாத அடிப்படைச் சம்பளம் அல்லது ரூபா 250,000 ஆகிய இரண்டில் குறைந்த பெறுமதி கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய போதிலும் இரண்டு உத்தியோகத்தர்களுக்கு ரூபா 293,000 இலிருந்து ரூபா 435,000 வரையான வீச்சுடைய இடர் கடன்கள் வழங்கப்பட்டிருந்தன. ஆந்த எல்லைகளுக்கு மிகையாகப் பெற்றுக்கொள்ளப்பட்ட அறவிடுவதற்கு தேசிய பாதீட்டுச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் அறிவுறுத்தப்பட்டிருந்தும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | 2007 சனவரி 10 ஆந் திகதிய எஸ் எல் ஐ எல் ஜி 104 ஆம் இலக்க உள்ளக சுற்றுநிருபம். | ஒரு வளவாளர் ஒரு நாளுக்கு ஆகக் கூடியது 03 மணித்தியாலங்கள் விரிவுரை நடாத்த முடியும் என்ற போதிலும் 08 மணித்தியாலங்கள் வீதம் விரிவுரை நடாத்தி படிகள் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தன. |

## 1.2.4 போதியளவான அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல்வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) (i) தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 11.1.5 ஆம் பிரிவின் பிரகாரம் ஒரு தடைவ மாத்திரம் செலுத்தக்கூடிய ஆதனக் கடனானது ஆலோசகருக்கு இரண்டு தடைவைகள் செலுத்தப்பட்டிருந்ததுடன் அவ்வாறு செலுத்தப்பட்ட பணம் 2005 ஆம் ஆண்டின் போது ரூபா 700,000 ஆகவும் 2012 ஆம் ஆண்டின் போது ரூபா 500,000 ஆகவும் இருந்தன.

(ii) 2005 மார்ச் 31 ஆந் திகதிய 8/2005 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் ஆதனக் கடனானது வங்கியின் மூலம் செலுத்தவேண்டிய போதிலும் 2005 இலிருந்து 2012 வரையான காலத்தின் போது 08 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 6,742,600 தொகையான ஆதனக் கடன்கள் நிறுவனத்தினால் வழங்கப்பட்டிருந்தன.

(iii) ரூபா 1,447,800 தொகையான ஆதனக் கடன் கோரிய ஒரு உத்தியோகத்தருக்கு கோரிய கடன் தொகையைவிட ரூபா 100,000 மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) 2000 சனவரி 11 ஆந் திகதிய பீஎவ்/பீஈ/05 ஆம் இலக்க பொது நிதி சுற்றுநிருபத்திற்கு முரணாக பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் மூலமும் அமைச்சு செயலாளரின் அங்கீகாரத்தின் மூலமும் நிறுவனத்தின் பதவியணியினருக்கு வீதித் துறை உதவிச் செயற்திட்டத்தின் மூலம் நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட ஒப்படைப்பு நடவடிக்கைக்காக பின்வருமாறு படிகள் செலுத்தப்பட்டிருந்தன.

(i) 2007 ஏப்ரல் 05 ஆந் திகதிய 33 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றுநிருபத்தை பிழையாகப் பயன்படுத்தி செயற்திட்ட செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக சம்பளத்தில் 1/3 பங்கு படியாக ரூபா 464,879 தொகை மீளாய்வாண்டின் போது பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

(ii) வீதி வரைபடங்களைத் தயாரிப்பதற்காக பிரதேச சபை 57 படங்களுக்கு ரூபா 7,000 படியாக ரூபா 399,000 தொகையைப் பெற்றுக்கொண்டிருந்தது.

(iii) செயற்திட்டங்களை ஒப்படைத்தமைக்கான செயற்திட்ட மீளாய்வு செயலமர்வுகளை நடாத்தும் போது வளவாளர்களுக்கு ஒரு மணித்தியாலத்திற்கு ரூபா 2,500 படியாக 92 மணித்தியாலங்களுக்கு ரூபா 230,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

## 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான நிறுவகச் செயற்பாடுகள் ரூபா 3,467,357 விளைவித்திருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 2,882,054 ஆனமையால் மீளாய்வாண்டின் போது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரூபா 6,349,411 தொகையான வீழ்ச்சிக்கு செயற்பாட்டு வருமானம் 23 சதவீதத்தால் அதாவது ரூபா 15,508,693 தொகையால் குறைவடைந்தமையும் அதற்கு நேரொத்த வகையில் செயற்பாட்டுச் செலவுகள் 14 சதவீதத்தால் அதாவது ரூபா 9,159,281 தொகையால் குறைவடைந்தமையும் பிரதானமாகத் தாக்கமளித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

## 3.1 செயலாற்றுகை

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் உறுப்பினர்களுக்கும் உத்தியோகத்தர்களுக்கும் மற்றும் ஊழியர்களுக்கும் அவர்களது கடமைகளை மிகவும் வினைத்திறனாகவும் பயனுறுதியாகவும் நிறைவேற்றக் கூடியவாறு செயலமர்வுகளையும் பயிற்சிப் பாடநெறிகளையும் நடாத்துவதற்காக வருடாந்த பாதீட்டின் மூலம் ரூபா 14,875,,000 ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது இதற்காக ரூபா 16,580,717 தொகை செலவு செய்யப்பட்டிருந்த போதிலும் நிறுவகத்தின் திட்டமிடப்பட்ட செயலாற்றல் இடம்பெற்றிருக்கவில்லை என்பது பின்வரும் பிரிவு அறிக்கைகளின் பிரகாரம் அவதானிக்கப்பட்டது.

| பிரிவு | பாதீடுசெய்யப்பட்டவை | | | உள்ளபடியானவை | | | உள்ளபடியான செலவு நிதி ஏற்பாட்டின் சதவீதமாக | உள்ளபடியான செயலமர்வுகளின் எண்ணிக்கை மதிப்பீடுசெய்யப்பட்ட செயலமர்வுகளின் எண்ணிக்கையின் சதவீதமாக |
|---|---|---|---|---|---|---|---|---|
| | செயலமர்வுகளின் எண்ணிக்கை | பங்குபற்றியோரின் எண்ணிக்கை | நிதி ஏற்பாடு | செயலமர்வுகளின் எண்ணிக்கை | பங்குபற்றியோரின் எண்ணிக்கை | செலவு | | |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | ரூபா | | | ரூபா | % | % |
| மனித வளம் | 23 | 600 | 2.125,000 | சமர்ப்பிக்கப்படவில்லை | | 2.332,565 | 109.8 | - |
| பொறியியல் | 28 | 795 | 2.125,000 | 10 | 351 | 401,231 | 18.7 | 35.7 |
| பொது முகாமைத்துவம் | 19 | 760 | 2.125,000 | 15 | 916 | 1,852,065 | 87.15 | 79 |
| பௌதீக திட்டமிடல் | 14 | 560 | 2.125,000 | 14 | 738 | 1,598,391 | 75.2 | 100 |
| நிதி முகாமைத்துவம் | 57 | 2,280 | 2.125,000 | 38 | 984 | 2,263,018 | 106.5 | 67 |
| சட்டம் | 09 | 450 | 2.125,000 | 21 | 1,005 | 2,552,814 | 120 | 253 |
| ஆராய்ச்சி | 07 | - | 2.125,000 | 06 | - | 2.753,817 | 129.6 | 86 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

- பொறியியல் பிரிவின் மதிப்பிடப்பட்ட 28 செயலமர்வுகள் மற்றும் செயற்பாடுகளில் 10 மாத்திரம் நிறைவேற்றப்பட்டிருந்ததுடன் அவற்றின் செயலாற்றல் 35.7 சதவீதமாக குறைந்த மட்டத்தில் காணப்பட்டது.
- நிதி முகாமைத்துவப் பிரிவில் நடாத்தப்பட வேண்டிய 57 செயலமர்வுகளில் 38 மாத்திரம் நடாத்தப்பட்டிருந்ததுடன் பயிற்சிகள் வழங்கப்படவேண்டிய 2280 மாணவர்களுக்காக மதிப்பீடு செய்யப்பட்ட ரூபா 2,125,000 தொகையினை மிகைத்து ரூபா 138,018 தொகை மேலதிகமாக செலவுசெய்து 984 மாணவர்களுக்கு மாத்திரம் பயிற்சி வழங்கப்பட்டிருந்தது.
- மனித வளங்கள் பிரிவில் மதிப்பிடப்பட்ட செயலமர்வுகள் மற்றும் செயற்பாடுகளின் எண்ணிக்கை 23 ஆக இருந்ததுடன் உள்ளபடியாக நடாத்தப்பட்ட செயலமர்வுகளின் எண்ணிக்கை மற்றும் பங்குபற்றியோரின் எண்ணிக்கை எவ்வளவு என்பதனைப் பரீட்சிப்பதற்காக செயல்முன்னேற்ற அறிக்கைகளும் செயலமர்வுகளுக்குரிய கோவைகளும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. கணக்குப் பிரிவின் செலவு விபரங்களின் பிரகாரம் மதிப்பீடு செய்யப்பட்ட செலவுகளை மிகைத்து ரூபா 207,566 தொகை செலவு செய்யப்பட்டிருந்தது.
- ஆராய்ச்சிப் பிரிவில் 07 செயலமர்வுகளை நடாத்துவதற்காக ரூபா 2,125,000 தொகை மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும் 06 செயலமர்வுகளைப் பூர்த்தி செய்வதற்காக ரூபா 2,753,817 தொகை செலவுசெய்யப்பட்டிருந்தது.

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

பல்வேறு பிரதேசங்களில் நடாத்தப்பட்ட 13 செயலமர்வுகளுக்காக ரூபா 70,728 தொகையான போக்குவரத்துக் கட்டணம் செலுத்தப்பட்டிருந்ததுடன் போக்குவரத்துச் செலவுகளைக் குறைப்பதற்கு மாகாண மற்றும் மாவட்ட மட்டங்களில் வளவாளர்களைத் தெரிவு செய்து விரிவுரைச் சபையினைத் தயார்படுத்துமாறு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு உத்தேசித்திருந்த போதிலும் அதனை இதுவரை அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.3 பயன்படுத்தப்படாத மற்றும் குறைவான பயன்பாடுடைய சொத்துக்கள்

2008 ஆம் ஆண்டில் ரூபா 324,990 தொகைக்கு கொள்வனவு செய்யப்பட்ட முச்சக்கர வண்டி 2014 மே வரை பயன்பாட்டிற்கு எடுக்கப்படாது வளவில் விளைவற்றுக்காணப்பட்டதுடன் அந்த வாகனத்திற்கு 2012 ஆம் ஆண்டிற்காக வருமான உத்தரவுப்பத்திரமும் காப்புறுதிச் சான்றிதழும் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

### 3.4 இனங்காணப்பட்ட நட்டங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பொருள் மெய்மையாய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட ரூபா 72,880 பெறுமதியான 03 நடமாடும் தொலைபேசிகள் மற்றும் அறிக்கையில் பதியப்பட்ட 02 கமராக்கள் பௌதீக மெய்மையாய்வுச் சந்தர்ப்பத்தில் நிறுவனத்தில் காணப்படவில்லை.

(ஆ) ரூபா 24,390 பெறுமதியான 02 நிறைவேற்றுப் பைகள் மற்றும் ரூபா 122,500 பெறுமதியான ஒரு கணனி என்பன நிறுவகத்தை விட்டுச்சென்ற இரண்டு உத்தியோகத்தர்களினால் எடுத்துச்செல்லப்பட்டமை பௌதீக பரிசோதனைச் சந்தர்ப்பத்தில் வெளிப்படுத்தப்பட்டது.

## 3.5 பதவியணியினர் நிருவாகம்

அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கை மற்றும் உள்ளவாறான பதவியணியினர் எண்ணிக்கை கீழே தரப்படுகின்றது. அதற்கிணங்க அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கையைப் பேணுவதற்கு முகாமை தவறியிருந்தது.

| | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கை | உள்ளவாறான பதவியணியினர் எண்ணிக்கை | வெற்றிடங்கள் மற்றும் (மிகைகளின்) எண்ணிக்கை |
|---|---|---|---|
| பதவிநிலை | 10 | 08 | (02) |
| பதவிநிலையல்லாத | 26 | 15 | (11) |
| சிற்றூழியர் | 06 | 11 | 05 |

## 4. கணக்களி தன்மையும் நல்லாட்சியும்

### நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய பிஈடி 12 ஆம் இலக்க நல்லாட்சி தொடர்பான வழிகாட்டல் கோவையின் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் நிறுவனத்தினால் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 யூலை 30 ஆந் திகதியே கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. அதாவது 05 மாதங்கள் தாமதித்தாகும்.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் தொடர்பாக காலத்திற்குக் காலம் நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் அம்சங்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) பொருள் இருப்பு பதிவேடும் களஞ்சிய கட்டுப்பாடும்

(ஆ) கடன் வழங்குதலும் கடன் கோவைகளைப் பேணுதலும்

(இ) செயலமர்வுகளை நடாத்துதலும் படிகளைச் செலுத்துதலும்

(ஈ) வாகனக் கட்டுப்பாடும் பதிவேடுகளைப் பேணுதலும்